இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 15-09-2023

# அண்ணன் இருக்கின்றார்!



**சந்தனமே!**
**தென் பொதிகை தவழ்ந்து வரும் இளங்காற்றே!**
**நந்தாச் சுடர் விளக்கே!**
**நறுமணத்துப் புதுமலரே!**
**கண்ணியத்தைக் கடமையினைக் கட்டுப்பாடெனும்**
**பண்பைக் கண்போலக் காத்திடற்குக்**
**கற்பித்த பெருந்தகையே!**
**சிங்கத் தமிழர்களின் சிந்தையெலாம் பறிகொண்டு**
**வங்கக் கடலோரம் வாய்மூடிக் கண்மூடி**
**மோனத் தவமிருக்கும் முத்தமிழே!**

**குடிசையெலாம் மேலுயர்ந்து**
**கோபுரமாய் விளங்கிடவும்**
**மடமையிருள், கொல்வறுமை**
**மடிந்தே மருகிடவும்**
**எல்லாரும் நலனெல்லாம்**
**எய்தி மகிழ்ந்திடவும்**
**நல்லதோராட்சியினைத்**
**தோற்றுவித்த நாயகமே!**
**எண்ணக் குறிப்பறிந்தே**
**ஈடேற்றும் தம்பியரின் அண்ணாவே!**
**எனையிங்கே ஆளாக்கிக்**
**காத்திட்ட ஆருயிரே!**
**நும்கனவு அத்தனையும் நனவாக்கும்**
**சீரியநற் பணியினையே செய்கின்றோம்**
**நாள்தோறும்!**
**செய்பணிகள் அனைத்திலுந்தான்**
**அண்ணனே! நீ இருக்கின்றாய்!**

– என்றே எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர்! காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா, உதயமான நாள் செப்டம்பர் 15 அன்று. அது இன்று!

முதன் முறை சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணா அவர்கள் தனது கன்னிப் பேச்சில் கனல் தெறிக்க ஒரு கருத்தைச் சொன்னார்கள். **“நாங்கள் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்று நீங்கள் அறிவீர்கள். இந்தச் சபையும் அறியும். நாங்கள் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்றால் எங்களைத் தோற்றுவித்ததும் இந்த நாட்டிலுள்ள ஒரு விசித்திரமான தலைமைதான் என்பதை யாவரும் உணர வேண்டும். விசித்திரமான நிலைமைகள்தான் விசித்திரமான கட்சிகளை ஏற்படுத்துகின்றன”** என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இன்னொன்றையும் சொன்னார் அண்ணா தொலைநோக்குப் பார்வையுடன். **“இந்த சபைக்கு நாங்கள் வந்தது என்றைக்கும் எதிர் அங்கத்தினர்களாகவே இருப்பதற்காக நுழையவில்லை. இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத்தான் போகிறோம்”** – என்று அண்ணா அவர்கள் சொன்ன நாள்: 4.7.1957. எண்ணி பத்தே ஆண்டில் அரியணையில் அமர்ந்துவிட்டார்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார். இன்று வரை ‘தமிழ்நாடு’ என்ற பெயரே அச்சம் தருவதாக இருக்கிறது. தமிழும் ஆங்கிலமும் என்பதை வரையறுத்தார். இந்தித் திணிப்புக்கு தடுப்புச் சுவர் அப்படியே இருக்கிறது. இன்று மற்ற மாநிலங்களும் இந்தித் திணிப்பை எதிர்க்கத் தொடங்கி இருக்கின்றன. சுயமரியாதைத் திருமணம் செல்லும் என்றார் அண்ணா. கடந்த வாரம் கூட உச்சநீதிமன்றம் இதனை உறுதி செய்துள்ளது. **‘விசித்திரமான நிலைமைகளை மாற்ற வந்த விசித்திரமான கட்சி’** என்பதை நிரூபித்தார் அண்ணா!

அண்ணா மறைவுற்ற போது பெரியார் சொன்னார்: **‘அண்ணா இருப்பது போலவே காரியங்கள் நடைபெற வேண்டும்’** என்று! இந்த சொற்களுக்குள்தான் எத்தனை பொருள்? அண்ணா இருப்பதைப் போலவே கொள்கை இருக்க வேண்டும், கோட்பாடு இருக்க வேண்டும், கழகம் இருக்க வேண்டும், கண்ணியம் நிலைக்க வேண்டும், கட்டுப்பாடு காக்க வேண்டும், தமிழ்நாடு காப்பாற்றப்பட வேண்டும். இவை அனைத்தும் சேர்ந்தது தான், **‘அண்ணா இருப்பது போலவே காரியங்கள் நடைபெற வேண்டும்’** என்பது ஆகும்.

கலைஞராட்சி, அண்ணாவின் ஆட்சியாக அப்படியே தொடர்ந்தது. மாநில சுயாட்சி இல்லையே என்று வருந்தினார் அண்ணா. மாநில சுயாட்சியை இந்திய அரசியலுக்குள் கொண்டு சென்று அதனை நிலைநிறுத்த அயராது உழைத்தார் கலைஞர். மாநில சுயாட்சித் தீர்மானம் போட்ட முதல் இந்திய மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றினார் கலைஞர். மாநிலக் கட்சிகளின் கருத்தைக் கேட்டு ஒன்றிய அரசு செயல்படும் நிலையை உருவாக்கினார். கூட்டணி ஆட்சி என்பது கூட்டாட்சியாகவும்– மாநில சுயாட்சியை உயிர்ப்பிப்பதாகவும் ஆக்கினார் கலைஞர். சமூகநீதிக் கோட்பாட்டை இந்தியவியல் கோட்பாடாக மாற்ற மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்த வைத்தார் கலைஞர்.

மாநிலக் கட்சிகள்தானே, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் தானே, ஒரு மாநிலக் கட்சித் தலைவர்தானே என்ற ஏளனப் பேச்சை அகற்றி, **‘மாநிலக் கட்சித் தலைவர்களே, அகில இந்தியத் தலைவர்களாக வலம் வரலாம்’** என்ற நிலையை கலைஞர் உருவாக்கினார். வடக்கின் தராசை கொஞ்சம் இறக்கி, தெற்கின் தராசை கொஞ்சம் உயர்த்தி – ஒன்றிய முள்ளின் முனையை கொஞ்சம் மழுக்கிக் காட்டினார் கலைஞர். **‘விசித்திரமான நிலைமைகளை மாற்ற வந்த விசித்திரமான கட்சி’** என்பதை நிரூபித்தார் கலைஞர்!

அந்த உருவாக்கத்தின் இன்றைய செயல்வடிவமாக திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காட்சி அளிக்கிறார்கள். தமிழ்நாட்டுக்குள் உருவான கூட்டணி பாணியை அகில இந்தியாவுக்கும் விரித்தார் இவர். **‘கரும்பு ஆலையில் மீண்டும் மீண்டும் பிழிவதைப் போல ஒரு சொட்டுக் கூட சிந்தாமல் பிழிய வேண்டும்’** என்று கூட்டணிக்கான பாணியைச் சொன்னார் அண்ணா. செய்து கொண்டிருக்கிறார் இன்றைய தலைவர். ‘இந்தியா’ கூட்டணியின் விதை மட்டுமல்ல, பதியமும் இங்கே போடப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்துக்கும் எடுத்துச் சென்று நட்டுவிக்கப்பட்டது. இனி தோப்பாகும். அண்ணாவே நினைத்துப் பாராத உச்சம் இது!

‘திராவிட மரபினத்தைச் சார்ந்தவன் நான்’ – என்று சொன்னார் அண்ணா. திராவிட மாடல் ஆட்சி என்ற பெயரே அச்சமூட்டுகிறது. ‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்’ என்றார் கலைஞர். ஜாதி வேறுபாடு மட்டுமே அவரால் நீக்க முடிந்தது. இதோ பெண் ஓதுவார்கள் பாடும் காட்சியைப் பார்க்கும் போது பால் பேதமும் பஞ்சாய் பறக்கிறது. தமிழ்நாடு அரசின் செயல் திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றும் வண்ணம் ஒரு கொள்கையாட்சியை நடத்தி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர். ‘மதறாசி’ போய்விட்டது இப்போது. ‘இப்படி ஒரு முதலமைச்சர் வேண்டும்’ என்று வங்காளத்திலும், மலையாளத்திலும் தெலுங்கிலும் குரல் கேட்கிறது. **‘விசித்திரமான நிலைமைகளை மாற்ற வந்த விசித்திரமான கட்சி’** என்பதை நிரூபித்து வருகிறார் தலைவர் மு.க.ஸ்டாலின்!

**தொடக்கத்தில் சொல்லப்பட்ட கவிதைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் வைத்த தலைப்பு: ‘அண்ணன் இருக்கிறார்’. ஆமாம்! அண்ணன் இருக்கிறார். வாழ்கிறார். ஆள்கிறார்.**

**அண்ணா வாழ்க!**

**அண்ணா ஆட்சி தொடர்க!**

## லெபனானில் அகதிகள் முகாமில் வன்முறை!

*லெபனான், செப். 15 -*

*லெபனான் நாட்டில் 10க்கும் மேற்பட்ட அகதிகள் முகாம்கள் உள்ளன. இவற்றில் ஒன்றான சிடான் என்ற துறைமுக நகரின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள அகதிகள் முகாமில் மோதல்கள் ஏற்பட்டு உள்ளன. இந்த மோதலில் ஆயுத மேந்திய போராளிகள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடக்கத்தில் 10க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.*

*இதனை தொடர்ந்து முகாமில் இருந்து நூற்றுக்கணக்கானோர் தப்பி வெளியேறி வருகின்றனர். அவர்களில் பலர் உள்ளூர் மசூதிகள், பள்ளிகள் மற்றும் சிடான் நகராட்சி கட்டிடம் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்த மோதல் சம்பவத்தில் 6 பேர் பலியாகி உள்ளதாகவும், 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ள தாகவும் தகவல் வெளியாகி உள்ளது.*

## மகாவீரர் !



இளவரசராக அரண்மனையில் பிறந்து, இன்ப துன்பங்களை எல்லாம் துய்த்து வளர்ந்த ஒருவர், நடுநிலை தவறாத அறநெறியைப் பரப்பும் ஆர்வ மிகுதியால், இல்லற இன்பத்தை ஏற்க மறுத்தார்.

ஏழை எளியவர் இன்னல்களைக் களையவும், கண்ணீரைத் துடைக்கவும் தம்முடைய செல்வங்களையெல்லாம் பகிர்ந்து கொடுத்து, முதல் பொதுவுடைமைப் புரட்சி செய்தார்.

அந்தத் தன்னலம். வென்ற அறவாணர்தாம் மகாவீரர் ஆவார்.

**- பேரறிஞர் அண்ணா**

### தொடர் விடுமுறை நெரிசலைத் தவிர்க்க

## மெட்ரோ ரயில் சேவை இன்று நீட்டிப்பு!

*சென்னை,செப்.15-*

*சென்னையில் இன்று (செப்.15) ஒரு நாள் மட்டும் நெரிசல்மிகு நேரங்களில் மெட்ரோ ரயில் சேவை நீட்டுக்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.*

*இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்திருப்பதாவது:*

*வரும் திங்கள்கிழமை (செப்.18) அன்று விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, அரசு பொது விடுமுறை அறிவிப்பை தொடர்ந்து, சொந்த ஊருக்கு செல்லும் மெட்ரோ ரயில் பயணிகளின் வசதிக்காக நெரிசல் மிகு நேரத்தில் இயக்கப்பட்டு வரும் மெட்ரோ ரயில் சேவை, இன்று மட்டும் இரவு 10 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.*

*நீட்டிக்கப்பட்ட நெரிசல் மிகு நேரங்களில் இரவு 8 மணி முதல் 10 மணி வரை மெட்ரோ ரயில் சேவைகள் இரண்டு வழித்தடத்திலும் 9 நிமிட இடைவெளிக்கு பதிலாக 6 நிமிட இடைவெளியில் இயக்கப்படும். போக்குவரத்து நெரிசல் மற்றும் சிரமம் இல்லாத பயணத்தை மேற்கொள்ள பயணிகள் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த மெட்ரோ ரயில் நீட்டிப்பு சேவைகள் இன்று மட்டுமே எனத் தெரிவிக்கப்பட்டிள்ளது.*




சென்னை நந்தனத்தில், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏற்பாட்டில் நேற்று (14.09.2023), தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம், EnnVee Solutions Pvt Ltd, HLL Lifecare Ltd இணைந்து நடத்திய மாதவிடாய் குப்பி (Menstrual Cup) குறித்த விழிப்புணர்வு வழங்கல் துவக்க விழாவில், திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, மாதவிடாய் குப்பிகளை மகளிருக்கு வழங்கினார்கள். இந்நிகழ்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் டாக்டர்.ஜே. ராதாகிருஷ்ணன், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, HLL Life Care நிறுவனர் இயக்குநர் முனைவர்.அனிதா தம்பி, EnnVee Techno Group தலைமை நிர்வாக அதிகாரி வீரா வேணுகோபால், பகுதிச் செயலாளர்கள் நந்தனம் மதி, முரளி, பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்டச் செயலாளர் நாகராஜ், Enn Vee Solutions Pvt Ltd நிறுவனத்தினர்கள், HLL Lifecare Ltd நிறுவனத்தினர்கள் கலந்துகொண்டனர்.

கலைஞர் 100
1924 - 2023



பேரறிஞர் அண்ணா
அவர்களின்
115ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பேரறிஞர் அண்ணா அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்

நாள்: 15.9.2023, வெள்ளிக்கிழமை நேரம்: காலை 9.30 மணி
இடம்: அன்னை இந்திரா காந்தி சாலை, மாநகராட்சி வளாகம், காஞ்சிபுரம்

செ.ம.தொ.இ / 1048 / வரைகலை / 2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.in.gov.in

இயக்குநர்,
செய்தி - மக்கள் தொடர்புத்துறை,
சென்னை - 600 009.